மார்ச் - 4

**"கற்புள்ளவைகள் எவைகளோ (சுத்தமானவைகள் எவைகளோ) அன்புள்ளவைகள் எவைகளோ (சௌந்தரியமுள்ளவைகள் எவைகளோ) நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்"**

**- பிலி 4 : 8**

அசுத்தமானது எதுவோ, அது நமக்கு வருத்தத்தையும் துயரத்தையும் கொடுக்கிறதாகிவிடும் வரை, நாம் எது சுத்தமாக (கற்புள்ளதாக) இருக்கிறதோ அதை நேசிக்கவும், பயிலவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போது அதை ஞாபகத்திலிருந்து போக்கடிக்க விரும்புவோம். அசுத்தமான காரியங்களைப்பற்றி சிந்திப்பதைத் தவிர்த்து, எந்தக் காரியங்கள் சுத்தமுள்ளவைகளாயிருக்கின்றனவோ, அவைகளையே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதினால் மட்டுமே, நாம் இதை நிறைவேற்றுவோம். நாம் உண்மையான சௌந்தரியத்தை அறிந்துக் கொள்ளவும் அதை கண்ணியப்படுத்தவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். மிகவும் சுத்தமான காரியங்களை நாம் நினைக்கும் போது, அவசியமாகவே நாம் நமது மனதின் பார்வையை எவ்வளவு உயரத்தில் பார்க்க சாத்தியமோ அந்த அளவிற்கு உயர்த்தி பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட நம்மால் கூடுமானவரை, நமது தேவனுடையதும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடையவும், பூரண குணத்தின் சௌந்தரியத்தையும் அதற்கு இசைவாக அவருடைய அடிச்சுவடுகளில் கருத்தாய் பின்பற்றுகிற ஒன்று அல்லது மற்ற கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் வெளிப்படுத்தும் சௌந்தர்யத்தையும் கண்டு கொள்ள வேண்டும்.

**- Z '03, 9 (R 3129).**

தேவனை மகிமைப்படுத்துகிறதிலுள்ள நோக்கத்தின் பாவமில்லாத நிலையையே "கற்புள்ளவைகள்" என்ற வார்த்தைக் குறிக்கிறது. நல்ல குணத்தையும், தத்துவங்களையும் உயர்வாக மதிப்பதையே "சௌந்தரியமுள்ளவைகள்" (அன்புள்ளவைகள்) குறிக்கிறது. எது சரியான திட்ட அளவுக்கு இணக்கமாக இருக்கிறதோ, அதைத்தான் "நற்கீர்த்தி" குறிக்கிறது. இப்படிப்பட்டவைகளை சிந்தித்துக் கொண்டிருந்தால், நிச்சயமாகவே அது நமது நோக்கங்களை சுத்தமாக்கி, தன்னலமற்ற அன்பை அபிவிருத்தி செய்து, குணத்தை மேன்மையுறச் செய்கிறது.

**-P '26, 28.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 12:6; 19:8; 24:3-5; 119:40; நீதி 15:26; 20:9; மத் 5:3-12; யோவா 15:9-17; 1தீமோ 1:5; 3:9; 2தீமோ 2:22; ரோம 12:9-21; 1கொரி 13; 2கொரி 6:8; கொலோ 3:12-17; எபி 11:2,39; 1யோவா 4:7-21; நீதி 22:1; பிர 7:1.

**கோபுர வாசிப்பு** : Z '11, 165 (R 4826).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் கற்பும், அன்பும், புகழ்வாய்ந்ததுமானக் காரியங்களை சிந்தித்துக் கொண்டிருந்தேனா? அல்லது அதற்கு மாறாக சிந்தித்துக் கொண்டிருந்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? அதன் பலன் என்ன?